1994 ஏப்ரல் 26]

5. உரிமைப் பிரச்சினை

11-4-1994-ஆம் நாளன்று பேரவை வளாகத்தில் தம்மை மூன்று உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 220-ன்கீழ் உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் என்னிடத்திலே அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதம் 11ஆம் தேதி அன்று (குறுக்கீடு) இது முக்கியமான பிரச்சினை. இப்போது எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) அப்படியானால் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடவேண்டும் என்கிற நோக்கம் உங்களுக்கு இல்லை. இது பத்திரிகையில் வரவேண்டும் என்ற (குறுக்கீடு) இல்லை. . . . பின் எப்படி? முதலமைச்சர் அவர்களோ மற்ற அமைச்சர்களோ எப்படிப் பதில் சொல்வார்கள்? (குறுக்கீடு) எழுத்து மூலம் கொடுக்காமல் இது எப்படி வரும்? (குறுக்கீடு) இது எப்படி வரும்? எந்த விதியின் கீழ் வரும்? (குறுக்கீடு) எந்த விதியின் கீழ் வரும்? (குறுக்கீடு) இதை அனுமதிக்கவே முடியாது. (குறுக்கீடு) விதியில்லாமல் என்ன இருக்கிறது? மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் நாட்டிலே ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளுக்கும் ஆயிரக்கணக்கான தகவல்களை இங்கே நாம் தரமுடியாது. அதற்கெல்லாம் முறை இருக்கிறது, வகை இருக்கிறது, விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைப்படி ஒரு மணி நேரத்திற்கு முன்னாலேயே அவர்கள் எழுதிக் கொடுத்தால் அதற்குத் தக்க பதிலைத் தருவதற்கு அரசுக்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே உடனே எழுதிக் கொடுங்கள், நாளை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள், பேரவையில் தான் பணியாற்றிய விதத்திற்காக பேரவையின் வளாகத்தில் வெளியே லாபியில், தான் தகாத வார்த்தைகளால் பேசப்பட்டு, தாக்கப்படக்கூடிய சூழ்நிலையும் உருவாயிற்று என்ற ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை அவை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அதை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

"கடந்த மாதம் 11-ஆம் தேதி நான் சட்டசபையில் என் கேள்விக்குப் பதில் பெற்று, அதற்கு நான் துணைக் கேள்வி கேட்டுவிட்டு வெளியில் வரும்போது, லாபியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. திண்டிவனம் பன்னீர்செல்வம் ஆகிய மூவரும் என்னுடைய பெண்மையை பாதிக்கும் வகையில் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்தார்கள். இந்தச் செயல் என் உரிமையைப் பாதிக்கிற அளவிற்கு உள்ளது. எனவே உரிமை மீறல் பிரச்சினையாக இதை எடுத்துக்கொண்டு உரிமைக் குழுவுக்கு அனுப்பி, தீர விசாரித்து நீதி வழங்கவேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையாக என்னிடத்திலே எடுத்துச் சொல்லி, அதுபற்றி நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று பேரவைக்குச் சொல்லி, இதை அவை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் உரிய வகையில் நீங்கள் கொடுத்தால் அதை அவை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்திருந்தேன். அதற்கேற்ப பேரவை விதி 220-ன்கீழ் இந்த அறிவிப்பினை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பினை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே, இது அவை உரிமை மீறல் பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிற காரணத்தால், ஏனைய சில விதிகளில் வேறு விதமான விளக்கங்கள் சொல்லப்பட்டு இருந்தாலும், பேரவை விதி 226--ன்படி "Notwithstanding anything contained in these rules, the Speaker may suo motu refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation and report" என்று இருக்கிற அந்த விதியின்படி, இந்தப் பிரச்சினையை மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோது, அவை உரிமை மீறல் பிரச்சினை இதில் இருக்கிறது என்று கருதி, அவை உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பி விசாரித்து, இதனுடைய அறிக்கையைப் பேரவைக்கு வழங்குமாறு கேட்டு, அவை உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

முற்பகல் 11-30

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ. எஸ். அமர்நாத். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜீனத் சர்புதீன் அவர்கள் சம்பந்தப்பட்டது, அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்..

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உங்கள் கட்சியாக இருக்கட்டும், எனக்கு அவர்கள் உறுப்பினர்; இந்த அவையினுடைய உறுப்பினர். *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். டேனியல்ராஜ்: கட்சியிடம் ஒரு மனுக்கொடுத்து இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கலாம்; அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். எனக்கு, அவை உரிமை மீறல் பிரச்சினைக்காகக் கொடுக்கிறபோது, அதற்கு நான் நடவடிக்கை எடுக்கிறேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்கள் கட்சியில் அதற்கு என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். *(குறுக்கீடுகள்)* உங்கள் கட்சியில் என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர், அவருடைய உரிமை, இந்த அவையில் அவர் பணியாற்றியமைக்காகப் பாதிக்கப்படுகிறபோது, நான் நடவடிக்கை எடுக்கிற கடமை எனக்கு இருக்கிறது. அதை நான் இன்றைக்குச் செய்து இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

6. கவன ஈர்ப்பு

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் சரிவர இயங்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத். *(குறுக்கீடுகள்)*

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள 'சி.டி.ஸ்கேன்' சரிவர இயங்காதது குறித்த "அவசரப் பொது முக்கியத்துவம் வ்ாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. *(குறுக்கீடுகள்).*

அறிக்கை

"மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி.ஸ்கேன் கடந்த *11-3-1994* முதல் *14-3-1994* வரை சப்ளை செய்த நிறுவனத்தாரின்

சீராக்கத்திற்கு (Servicing) உட்பட்டிருந்தபடியால், மேற்கண்ட காலத்தில் அக்கருவி இயங்காமல் இருந்தது. மீண்டும் 15-3-1994 முதல் இயங்கிக் கொண்டு வருகிறது.

5. உரிமைப் பிரச்சினை-தொடர்ச்சி

11-4-1994 ஆம் நாளன்று பேரவை வளாகத்தில் தம்மை மூன்று உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை--தொடர்ச்சி.

திரு. பி.வி. இராஜேந்திரன்: நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன்,. 226. (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன்: Is it extraordinary?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்ட்ராஆர்டினரி தான் இது. ஓர் உறுப்பினருடைய பெண்மையைப் பாதிக்கிற வகையில் நடக்கிற ஒன்று சாதாரணமா உங்களுக்கு? இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான்; இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான். இது என்ன அவ்வளவு சாதாரணமா உங்களுக்கு? பெண்மையைப் பாதிக்கிற பிரச்சினை. (குறுக்கீடுகள்) இல்லை, சாதாரணமானது என்றால், பாதிக்கப்பட்ட உறுப்பினரைப் பேச விட வேண்டும்; அதிலே கூட நான் விடவில்லை.

திரு. பி.வி. இராஜேந்திரன்: விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் என்று சொல்கிறேன்; அது உங்களைப் போன்றவர்களுக்குச் சரியாக இருக்கும். எனக்கு அது ஒவ்வாத காரியம். அதாவது பெண்மையைப் பாதிப்பது உங்களுக்கு அவ்வளவு சாத்தாரணக் காரியம் என்று இருக்கிறபோது, எனக்கு ஏற்றுக் கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, பேரவை விதி 226-ல் 'Notwithstanding anything contained in these rules' என, அந்த ரூல்ஸ் இருந்தாலும்கூட, suo motu, Speaker

TRUTH ALONE TRIUMPHS

அனுப்பலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்போதுதான் நான் சொன்னேன்; நீங்கள் எங்கேயோ வெளியே போய்விட்டு வந்து சொன்னால் எப்படி? உங்களுக்கு அவ்வளவு சாதாரணமாக இருக்கிறது, பெண்மையைப் பாதிக்கிற சம்பவம். திரு. இராஜேந்திரன், எங்களுக்கு அது எக்ஸ்ட்ரா ஆர்டினரி. ஆனால் இது எங்களுக்கு ஆர்டினரி என்று சொல்கிற அளவுக்குப் பேசுகின்ற உறுப்பினர்களிடத்தில் நான் அதிகாமாகப் பேச விரும்பவில்லை. திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? உட்காருகிறீர்களா, இல்லையா? நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதில் நான் முடிவு எடுத்து இருக்கிறேன். நான் முடிவு எடுத்த பிரச்சினையில், திரு. அழகிரிக்கு எந்த உரிமையும் இல்லை. உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் உட்கார வேண்டும். உட்காருங்கள். திரு. ஓ. எஸ். அமர்நாத்.

6. கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் இயங்காதது குறித்து--தொடர்ச்சி.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே மதுரை மாநகரில் இருக்கின்ற இராஜாஜி அரசு மருத்துவமனை மதுரை மாவட்டத்திற்கு உதவுகின்ற வகையில் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகிறார்கள். அந்த அரசு இராஜாஜி மருத்துவமனையிலே விபத்துக்கள் பிரிவு, தலைக் காயப் பிரிவு, நியூரோலாஜி பிரிவு--இவைகள் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சி.டி. ஸ்கேன் மிகவும் பயன்பட்டு வருகிறது. சி.டி. ஸ்கேன் கடந்த ஒரு மாதமாக இயங்காமல் இருந்தது. இப்போது அந்த சி.டி. ஸ்கேன் நிறுவனத்தாரின் சீராக்கத்திற்கு அது உட்பட்டு மீண்டும் அது இயங்கிக் கொண்டு இருப்பதாக அந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

(ஆ) பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் அ. செல்வராசன், வே. தம்புசாமி, ஜி. பழனிசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை